தொழிற் பயிற்சிப்பள்ளி ஆசிரியர்கள்

*** 498 வினா—திரு. ந. தருமலிங்கம்:** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் பணியாற்றும் போதகர்கள் மூன்று ஆண்டுகளுக்கு மேல் வேலை செய்தும் இது வரை வேலை நிரந்தரமாக்கப்படாமல் இருப்பதை அரசு மாற்றியமைக்கும் உத்தேசம் உண்டா ?

(இ) ஆம் எனில், எப்போதிருந்து இந்த ஏற்பாடு அமலுக்கு வரும் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) & (இ): இப் பதவி குறித்து வரையறுக்கப்பட்டுள்ள தொழில் நுட்பக் கல்வித் தகுதி பெற்று மூன்றாண்டு கால தற்காலிக ஆசிரியர்களாகப் பணி புரிந்தவர்களின் பணி, அவர்களின் மூன்றாண்டு கால தற்காலிக ஆசிரியர் பணியை மூன்றாண்டு கால நடைமுறை அனுபவமாகக் கொண்டு, முறைப்படுத்தப்பட்டுள்ளது. மூன்றாண்டுகளுக்கு மேல் பணி புரிந்துள்ள 55 தற்காலிக மேற்பார்வை ஆசிரியர்களின் பணி முறைப்படுத்தப்படாமலிருந்ததற்குக் காரணம் அவர்களுக்கு மூன்றாண்டு கால அனுபவம் இல்லை என்பதல்ல. வரையறுக்கப்பட்ட தொழில் நுட்பத் தகுதிகள் அவர்களுக்கு இல்லாமலிருந்ததேயாகும். தகுதி பற்றிய விதி அவர்களுக்குச் சாதகமாக இப்போது தளர்த்தப்பட்டதன் மூலம் அவர்களது பணி முறைப்படுத்தப்பட்டுள்ளது. மேற்பார்வையாளர் ஆசிரியர்களின் பணியை முறைப்படுத்துவது குறித்து இப்போது நடைமுறையில் உள்ள விதிமுறைகளை மாற்றம் செய்ய செயற்குறிப்பு எதுவுமில்லை.

Smoke Emenating From Disel Buses

* 499 Q.—DR. H. V. HANDE : THIRU K. VINAYAKAM : } Will the Hon. Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Government are aware that voluminous smoke puffed by the diesel buses poses a health hazard to road-users by polluting the atmosphere; and

(*b*) if so, the steps taken by the Government to prevent the smoke?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) ஆம்.

(இ) மோட்டார் வண்டிப் பொறியிலிருந்து வெளி வரும் வாயு சாலையின் மேற்பரப்பின் மீது படும்படி வெளியேற்றப்படாத வகையில் மோட்டார் வண்டிகளை அமைக்க வேண்டும் அல்லது அவற்றின் சாதனங்கள் பொருத்தப்பட வேண்டும் என்று 1940-ம் ஆண்டு தமிழ் நாடு மோட்டார் வண்டி விதிகள் வரையறுத்துள்ளது. தவிர்க்கக் கூடிய புகை, கண்ணுக்குத் தெரியும் நீராவி, எண்ணெய் அல்லது ஊறு விளைவிக்கும் பொருள் எதுவும் வெளியேற்றப்படாதவாறு ஒவ்வொரு மோட்டார் வண்டியும் அமைக்கப்பட்டு, பயன்படுத்தப் படவேண்டும். வெளிநாடுகள் சிலவற்றில் வாயுப் போக்குக் குழாய்